க்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 03 சனிக்கிழமை (16-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 170

16-05-1992

## தென்னாசியாவில் நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப்படுத்தி விட்டது!

### தடை குறித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 16

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சட்டவிரோத அமைப்பாகப் பிரகடனப் படுத்தி தடை விதித்ததன் மூலம் தென்னாசியாவிலுள்ள தனது நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப்படுத்திவிட்டது

—இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சட்டவிரோத அமைப்பாக பிரகடனப்படுத்தி இந்திய அரசு தடைவிதித்துள்ளது. தனது குறுகிய தேசிய நலனையும், உடனடி அரசியல் லாபத்தையும் கருத்திற் கொண்டு இந்தியா எடுத்துள்ள இந்த நடவடிக்கை குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. தமிழீழ மக்களின் நியாயமான தேசியப் போராட்டத்திற்கு இந்திய அரசு தொடர்ச்சியாக இழைத்துவரும் துரோக நடவடிக்கைகளின் ஓர் அம்சமாகவே நாம் இதனைக் கருதுகிறோம். இந்த நடவடிக்கை

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஆச்சரியம் இல்லையாம்!

கொழும்பு, மே 16

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா விதித்துள்ள தடை தமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை என்றும், இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்றும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

[உ-எ]

### ஆயிரம் பிக்குமார் இங்குவர முயற்சி?

கொழும்பு, மே 16

யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்த பௌத்த மத குருமார்கள் முன்வந்துள்ளனர் என்றும் —

இம்முறை சுமார் ஆயிரம் பௌத்த மத குருமார்களை அழைத்துச் செல்ல பௌத்த மதத் தூதுக்குழு விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ)

### தமிழ் கிராமம் சுற்றி வளைப்பு

யாழ்ப்பாணம், மே 16

செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் உள்ள கிறிஸ்தவக்குளம் என்னும் தமிழ்க் கிராமத்தைச் சுற்றிவளைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் இருந்து ஆறு பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

[ஓ-3]

### முச்சந்தி முரளி



அடுத்த வீட்டுக்காரர் அவலை நினைச்சு உரலை இடிக்கினம்......!

### இராணுவ நடவடிக்கையைத் தொடர ஒரு சமிக்ஞை என்று கருதக் கூடாது

#### மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

விடுதலைப் புலிகள் மீதான தடையை, இலங்கையில் உள்ள தமிழ் பகுதிகள் மீது இராணுவ நடவடிக்கையைத் தொடருவதற்கான சமிக்ஞையாக கொழும்பு அரசு எடுத்துக் கொள்ளக் கூடாது—

இவ்வாறு இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் விவகாரக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்கி அரசியல் தீர்வு ஒன்றை எட்டும்படி அந்நாட்டு அரசைத் தொடர்ந்து வற்புறுத்த வேண்டும்—

தமிழ்நாட்டில் புகலிடம் தேடியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை பயன்படுத்தாமல் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்— என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[அ-எ]

### மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மே 16

மட்டக்களப்பில் பொலிஸாரின் அட்டூழியங்களை கண்டித்து பாடசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-த]

### ராமோஸ் முன்னணி

மணிலா, மே 16

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 12 சதவீதமானவை எண்ணப்பட்ட நிலையில்—

அவற்றில் 22.9 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ராமோஸ் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இருந்து முன்னணியில் இருந்து வந்த திருமதி மிரியம் சந்தியாகோ 21.1 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார்.

[உ-எ]

### ஸ்ரீலங்கா இராணுவத்தின் போர்க்களத் தலைமையகம் வவுனியாவில் அமையும்?

வடக்கு — கிழக்கு பகுதிகளில் யுத்த நடவடிக்கைகளைக் கவனிக்க போர்க்களத் தலைமைப்பீடம் ஒன்றை அமைப்பதில் இராணுவத் தலைமைப் பீடம் தீவிர அக்கறை கொண்டுள்ளது என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தப் போர்க்களத் தலைமையகம் அமைப்பதற்காக வவுனியா, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய மூன்று இடங்களையும் இராணுவ உயர்பீடம் பரிசீலனை செய்து வருகின்றது.

இந்தத் தலைமையகம் வவுனியாவில் அமைக்கப்படுவதையே இராணுவ வட்டாரங்கள் வரவேற்று கருத்து வெளியிட்டுள்ளன.

இராணுவக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து கட்டளை மையம் போர்க்களத்திற்கு அருகில் இருக்க வேண்டும் என்று பலமான கருத்து முன்வைக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### இலங்கை அரசாங்கத்துக்கு இப்படியும் ஒரு செய்தியாம்!

புதுடில்லி, மே 16

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடாது

விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் மூலம் இலங்கை அரசுக்கு இந்தச் செய்தி தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மத்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

(அ-எ)

### அம்பாறை மாவட்டத்தில் இருந்து அச்சத்தால் வெளியேறும் தமிழர்கள் கைதாகின்றனர்!

அம்பாறை மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இருந்து வெளியேறும் அப்பாவித் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்படுகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கள, முஸ்லிம் [illegible] அச்சுறுத்தல் காரணமாக தமிழர்கள் வெளியேறுகின்றனர் என்றும் —

இவ்வாறு அச்சத்தினால் அங்கிருந்து வெளியேறும் அப்பாவிகளை கடந்த இரு வாரங்களாக இராணுவத்தினர் கைது செய்து வருகின்றனர் என்றும் தெரியவருகி[illegible]

### ராஜீவ் கொலை விசாரணை: சட்டபூர்வ நடவடிக்கைகள் நடந்து வருகின்றனவாம்!

புதுடில்லி, மே 16

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனையும், திரு. பொட்டம்மானையும் இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சென்னை சிறப்பு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள மற்ற எல்லா நபர்களையும் நாடு கடத்தி விசாரணைக்கு அனுப்புமாறு இலங்கையை கோருவது என்ற தமது உறுதிப்பாட்டை புதுடில்லி அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சட்ட நடவடிக்கைகள் எல்லாம் முடிவடைந்தவுடன் விசாரணைக்கு இவர்களை வரவழைப்பதற்கான பணி தொடங்கும்.

கொமன்வெல்த் உடன்படிக்கையின் கீழ் இந்த குழுவைச் சேர்ந்த நாடுகளில் ஒன்று மற்றைய நாட்டிடம் இருந்து விசாரணைக்கான நபர்களை நாடு கடத்தி அனுப்புமாறு கேட்டுக்கொள்ள முடியும் என்று அவர் சொன்னார்.

[அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி செயலகம் அருகே நடமாடிய நால்வர் கைது!

கொழும்பு, மே 16

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகம் அருகே நடமாடிய நான்கு இளைஞர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

செயலகம் அருகே ''தண்டர் போல்'' சோதனை நிலையத்தில் கடமையில் இருந்த கடற்படையினரே இவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் முஸ்லிம்கள் என்றும் ஒருவர் தமிழர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கோட்டை பொலீஸார் இவர்களை விசாரணை செய்து வருகின்றனர்.

இவர்களில் ஒரு முஸ்லிம் இளைஞனின் தோற்றம், ஏற்கனவே தேடப்பட்டு, புகைப்படங்கள் வெளியிடப்பட்ட 13 விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் ஒருவரின் படத்தை ஒத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் —

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக் காரியாலயமான ஸ்ரீகோத்தாவின் அருகில் நடமாடியதாகக் கூறப்படும் இரண்டு தமிழ் இளைஞர்களை மிரிஹான பொலீஸார் கைது செய்தனர்.

லான்ஸர் கார் ஒன்றில் சிதம்பரம் (வயது 28), அப்புத்துரை கந்தசாமி (வயது 25) ஆகிய இருவரும் அப்பகுதியில் சுற்றி வந்தனர் என்றும்—

உளவு வேலையில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். [உ-எ]


★ வாணி ★

கல்வி நிறுவனம்

வடலியடைப்பு.

ஆண்டு 9, 10, 11

விஞ்ஞானம்

J. R. சூரி

சனி / ஞாயிறு } 4—00 p m

[21012]


## விபத்தில் படுகாயம்

வண்ணார்பண்ணை, மே 16

யாழ். வின்ஸர் சந்தியில் லொறியும் மோட்டார்சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தலையில் படுகாயமடைந்தார்.

கஸ்தூரியார் வீதி, நகைக்கடை ஒன்றின் உரிமையாளரான பேரம்பலம் விக்னேஸ்வரன் [25 வயது] என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஓ-162-15]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### கு. கணேசபிள்ளை (கணேஸ்)

[அச்சுவேலி, கணேஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

தோற்றம்; 20-12-1938 மறைவு: 17-04-1992

குலத்தின் நிலைக்களமாய், குடும்பத்தின் ஒளிச்சுடராய், அன்பின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து, எங்கள் குலவிளக்காய் திகழ்ந்த அப்பாவின் மரணச் செய்தி அறிந்து, எமது துயரத்தில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்து, கண்ணீர் அஞ்சலி செலுத்திய உற்றார்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரது இல்லத்தில் நாளை [17-05-92) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

பத்தமேனி,
அச்சுவேலி.

[4860]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ''டொனால்ட் கணேசகுமார்'' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து யாழ். பற்றிஷியன்ஸ் அணி மோதும்.

50 ஓவர்களைக் கொண்ட இந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். [உ]

★ ★ ★

ஷப்றா கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 ஓவர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டித் தொடரில் இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஓல்ட்கோட்ஸ் அணி மோதும்

நண்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகும் மற்றைய ஆட்டத்தில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதும். இவ்விரு ஆட்டங்களும் யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும்.

இன்று நண்பகல் 1.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் மூன்றாவது ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து மல்லாகம் கி. அ. சங்க அணி மோதும்.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ஜொலி ஸ்ரார்ஸ் [கோல்ட்ஸ்] அணியை சென்றலைட்ஸ் [சொக்ஸ்] அணியும்—

சென்றலைட்ஸ் [புளூஸ்] அணியை ஷப்றா அணியும் தோற்கடித்தன.

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நவசக்தி அணியை எதிர்த்து ஸ்கந்தா அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகும். [உ]

## ஆத்மஜோதி முத்தையாவின் பிறந்ததின விழா

யாழ்ப்பாணம், மே 16

'ஆத்மஜோதி' நா. முத்தையாவின் எழுபத்தைந்தாவது பிறந்ததின விழா இன்று நடைபெறுகிறது.

கைதடி சைவச்சிறார் இல்லத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் இடம்பெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸும் ஆசியுரை வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் சி. க. சிற்றம்பலம், கலாநிதி க. கனகராசா உட்படப் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

ஏழாலை ஸ்ரீபாதாள ஞானவைரவர் தேவஸ்தான இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் இந்த விழா நடைபெறவுள்ளது.

### குவைத், ஈராக்கிலிருந்து திரும்பியோர்

## நட்டஈடு பெறுவதற்கான படிவங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 16

கலவரம் காரணமாக குவைத், ஈராக் நாடுகளில் இருந்து இங்கு திரும்பியவர்கள் நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலக பரிபாலனக் கிளையில் அடுத்த புதன்கிழமை முதல் விநியோகிக்கப்படும்.

உரிய அத்தாட்சிப் படிவங்களைச் சமர்ப்பித்து, எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளளாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு, நட்டம் ஏற்பட்ட பொருள்கள் அவற்றை கொள்வனவு செய்ததற்கான பற்றுச் சீட்டுக்கள், உயிரிழப்பு ஏற்பட்டிருப்பின் அதற்கான இறப்பு அத்தாட்சிப் பத்திரம், காயமடைந்திருப்பின் அதை உறுதி செய்யும் வைத்திய அறிக்கை என்பவற்றின் மூலம் பிரதிகளை அத்தாட்சிப்பத்திரங்களாகப் பயன்படுத்தி — விண்ணப்பதாரி நோடியாகச் சமூகமளித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது

அதேசமயம் — ஏற்கனவே நட்டஈடு கோரி விண்ணப்பித்து அதற்கான பதிவு இலக்கங்களை கொழும்பு அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொண்டவர்கள் மீண்டும் இங்கிருந்து விண்ணப்பிக்கத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5-162)

# இனிமேல் திருமணங்களுக்கு வைத்திய சான்றிதழும் தேவை

## அப்படி ஒரு காலம் வருமாம்!

கொழும்பு, மே 16

வருங்காலத்தில் திருமணங்களுக்கு சாதகப் பொருத்தம் பார்க்கும் வழக்கத்துடன் மணமக்கள் இருவருக்கும் 'எய்ட்ஸ்' நோய் இல்லை என்பதை நிரூபிக்கும் பரிசோதனை செய்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

குடும்பத்திட்ட சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் சிரியானி பஸநாயக்கா முன்கண்டவாறு சொன்னார்.

ஹோட்டல் ஒபரோயில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (உ-எ)

## இன்று

குருநகர், மே 16

நாட்டுக்கூத்து கலாநிதி 'புகுந்தார்' ம. யோசேப்பின் பத்தாவதாண்டு நினைவு தினத்தை யாழ். நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம் இன்று மாலை யாழ். பேராலய திறந்த வெளியரங்கில் நடத்தவுள்ளது.

யாழ். பேராலய பங்குத் தந்தை வண. எஸ். எச். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி பேருரையும், கடற்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஸ்ரனிமாஸ்டர் சிறப்புரையும் நிகழ்த்துவர்.

ஞாபகார்த்தமாக 'குருசரணம்' கைநூல் வெளியீடும், 'எஸ்த்தாக்கியார்' நாட்டுக்கூத்தும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 16

ஈழத்துத் தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை எனப்படும் அமரர் சி. இராமலிங்கத்தின் 3 ஆவது நினைவுதின வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

புதிய சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி வகுப்புகளும் இன்று ஆரம்பித்து வைக்கப்படும். [ஓ-10]

★ ★ ★

யாழ் பல்கலைக் கழக எழுதுவினைஞர்கள் மற்றும் அதே தரத்திலான ஊழியர்கள் ஆகியோருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8.30 மணிக்கு பல்கலைக் கழக புவியியல் மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 16

யாழ். கந்தர்மடம், ஸ்ரீ சிவகுருநாத குரு பீடத்தில், (வேதாந்தமடம்), இன்று பிற்பகல் 3.30 மணிக்கு, இசைப் பேரறிஞர் திரு. பே. சந்திரசேகரம், ''சைவசித்தாந்தமும் திருமுறைகளும்'' என்ற பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். [ஓ]


Practice Makes One Perfect

O/L 92

விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கான

பயிற்சிப் பரீட்சைகள்

2 ஆவது பரீட்சை:

17-05-1992

ஒவ்வொரு மாதத்தின் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும். இந்நிறுவனங்களில்கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்கேற்கலாம்.

Bond — யாழ்ப்பாணம்
Selin — இருபாலை
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
Vinyls — சுன்னாகம்
National — பண்டத்தரிப்பு
Subra — சித்தன்கேணி
Vinayahar — மானிப்பாய்

வினாத்தாள்கள் பெற விரும்பும் பாடசாலைகள் 16-05-1992 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விவரங்களுக்கு:

Examination Unit,
BOND Institutes,
JAFFNA.

[கி-2422]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் நெல் கொள்வனவு ஏற்பாடு

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு உதவ

யாழ்ப்பாணம், மே 16

நெல் விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி விவசாயிகளுக்கு உதவுவதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முன்னர் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெல்லை ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்வதே புதிய திட்டம் ஆகும்.

பொருளாதாரத் தடை காரணமாக பெரும் செலவில் கிளிநொச்சி விவசாயிகள் இம்முறை பெரும்போக நெல்லை உற்பத்தி செய்திருந்தனர். ஆனால் இம்முறை அவர்களுக்கு எதிர்பார்த்த விளைச்சலும் கிடைக்கவில்லை.

நெல்லும் வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடக்கிறது. இதனால் இதன் விலையும் மூடை 525 ரூபாவாகச் சரிவடைந்தது.

யாழ்ப்பாணத்தில் தற்போது அரிசி போதிய அளவு இருப்பதால், கிளிநொச்சி சென்று நெல் கொள்வனவு செய்வோர் எண்ணிக்கை குறைந்ததும் இந்த தேக்கத்துக்கும் விலை வீழ்ச்சிக்கும் ஒரு காரணம் என்று நம்பப்படுகிறது.

கிளிநொச்சி சென்று நெல்லைக் கொள்வனவு செய்ய யாழ். வர்த்தகர்கள் தயங்குவதற்கு கொம்படியில் தற்போது நிலவும் போக்குவரத்துக் கஷ்டமும் ஒரு காரணம் ஆகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாதாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கிலேயே கிளிநொச்சி விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு ப.நோ.கூ.ச. மூலம் முன்னர் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வது குறித்து முடிவு எடுக்கப்பட்டது. [இ]

## இரு தமிழ்ப் பெண்கள் போலி வீஸாவுடன் கைது

போலி வீஸாவுடன் கைது செய்யப்பட்ட இரு தமிழ் பெண்களையும் இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதிவான் சரத் அம்பேபிட்டிய அனுமதி அளித்தார்.

சதாசிவம் அருட்செல்வி, பாலசிங்கம் அனுஷியா என்ற இளம் பெண்களே போலி தாய்லாந்து வீஸாவுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களை மீண்டும் எதிர்வரும் 21 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டது. (இ-3)

## ‘காப்பரண்’

யாழ்ப்பாணம், மே 16

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் முத்திங்கள் இதழான ‘காப்பரண்’ இரண்டாவது இதழ் வெளிவந்து விட்டது.

[இ]

## குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கை கைவிடப்படவில்லையாம்

கொழும்பு, மே. 16

யாழ். குடா நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் கைவிடப்படவில்லை. திட்டமிட்டபடி இராணுவ நடவடிக்கைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும்.

இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க இதனைத் தெரிவித்ததாக நேற்றைய கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-5)


**Bata பாட்டா**

வடபகுதி மக்களின் நலன் கருதி
தற்போது
வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
25% விசேட கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:

**பாட்டா** மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில்றோட், வவுனியா.
30, குமார வீதி கொழும்பு-11.

[20752]



**C.C.A**
**கலை; வர்த்தக கல்லூரி,**
யாழ்ப்பாணம்.

**O/L Day Classes**

விஞ்ஞானம்:
இரா. செல்வவடிவேல்
கணிதம்:
இரா. அருட்செல்வம்
தமிழ்
சமயம் } –
கோப்பாய் சிவம்
சமூகக்கல்வி:
கணேஸ்
ஆங்கிலம்:
தர்மலிங்கம்
வர்த்தகம்:
விக்கி
புதிய பிரிவு II
ஆரம்பம்:
19–05–1992
[சி-2403]



## கலை, வர்த்தகக் கல்லூரி
## .C.C.A

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 92 மீட்டல் வினா - விடை வகுப்புகள்**

**ஆரம்பம்: 16 - 05 - 1992**

| | | | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|
| பொருளியல் | — | உதயன் | 2-00 — 3-00 | 2-00 — 3-00 |
| கணக்கியல் | — | ஸ்ரீ | 3-00 — 4-30 | 3-00 — 4-30 |
| வர்த்தகம் | — | இரட்ணம் | 4-30 — 5-30 | 4-30 — 5-30 |
| அளவையியல் | — | சயந்தன் | 12-00 — 1-00 | 12-00 — 1-00 |
| இந்து நாகரிகம் | — | ஜோதிஸ்வரன் | 1-00 — 2-00 | 1-00 — 2-00 |

குறிப்பு: (1) அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(2) 1991 முதல் 1980 வரை வினா-விடை வகுப்பு.
அச்சடித்த பாடக் குறிப்பு வழங்கப்படும்.

**A/L 1993**
புதிய பிரிவு
ஆரம்பம்: 16-05-1992
காலை 8 மணி
[வழமையான ஆசிரியர் குழு]

**A/L 1994**
புதிய பிரிவு II
ஆரம்பம்: 16-05-1992
காலை 8 மணி
(வழமையான ஆசிரியர் குழு)

[சி-2407]



## விவசாயப் பயிற்சி நெறி
### (6 மாதங்கள்)

மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 17 வயதிற்கும், 23 வயதிற்கும் இடைப்பட்ட க. பொ. த. (சாதாரணம்) சித்தி எய்திய இளைஞர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

25 – 05 – 1992 காலை 10 மணியளவில் சான்றிதழ்களுடன் பரந்தன் இளைஞர் பயிற்சி நிலையத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

★ தெரிவு செய்யப்பட்டோருக்கு பயிற்சிக் காலத்தில் உணவு, இருப்பிட வசதி இலவசமாக வழங்கப்படும்.

– பணிப்பாளர்.

[சி-2324]



உ

சிவமயம்

## திருமணத் திருமுகம்

மணமகன்: **மதிமகன்** [பொறியியலாளர்]
(குரும்பசிட்டியூர் ‘மதி அக்கடமி’ திரு திருமதி வேல் அமுதலிங்கம் தம்பதிகளின் ஏக புதல்வன்)

மணமகள்: **தயாளினி**
[‘அண்ணா தொழிலகம்’ உரிமையாளர் இணுவிலூர் திரு. திருமதி எஸ். பி. நடராசா தம்பதிகளின் ஏக புத்திரி]

இடம்: ‘அண்ணா இல்லம்’ இணுவில்

காலம்: ஆங்கிரச வருஷம் வைகாசி மாதம் 8 ஆம் நாள் 21-05-92 வியாழன்

முகூர்த்தம்: முற்பகல் 9-44 மணி முதல் 11-40 மணி வரை உள்ள கடக லக்கின சுப வேளை,

குறிப்பு: சிறப்பு வரவேற்புபசாரம் ‘அண்ணா இல்லத்தில் 22-05-92 வெள்ளி பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

தங்கள் நல்வரவையும், நல்வாழ்த்தையும் ஆசையுடன் நாடும்:

திரு. திருமதி
வேல் அமுதலிங்கம்,
[வேல் அமுதன்],
பாடசாலை ஒழுங்கை,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

திரு. திருமதி
எஸ். பி. நடராசா,
[அண்ணா தொழிலக உரிமையாளர்],
‘அண்ணா இல்லம்’,
இணுவில்.

(இரு வீட்டார் அழைப்பு)

★ தனிப்பட்ட அழைப்பு கிடைக்காத அன்பர்கள் இதனை அழைப்பாக ஏற்று, வருகை தரும் வண்ணம் தயவன்பாக வேண்டுகின்றோம்.

[இ-2291]



காரைநகர்
பாலாவோடை
குறிஞ்சாக்குழி
ஸ்ரீ முத்துமாரி
அம்பாள்
தேர்த்தினத்தின்
நினைவாக
சங்காபிஷேகம்



தேரினிலே அன்னை வரும் கோலம் - இன்று
தேகமே மெய்சிலிர்த்து நிற்கின்ற நேரம்
பூமாலை சொரிந்திடும் நேரமதில் - அம்மா!
கவிபாடித் துதித்து நிற்கின்றோம்!

★

வழக்கம்பரை முத்துமாரி அம்பாளிற்கு
எம் தாயின் தேர்த்தினத்தின் நினைவாக
இன்று சனிக்கிழமை நடக்கிறது
சங்காபிஷேகம்.

அம்பிகையின் அடியவரே
ஓடோடி வந்திடுக!
அருட்பெரும் அன்னையின்
அருள்தனைப் பெற்றிடுக!!

இங்ஙனம்,
காரைநகர் அம்பிகை அடியார்கள்.

[4859]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

TOEFL கசற்றுக்களும், புத்தகங்களும் உடன் விற்பனைக்குண்டு. 71, றக்கா றோட், யாழ்ப்பாணம். [21009]

## விற்பனையாகின்றன

உயர் கல்விப்பதிப்பகம் (கொழும்புத்துறை) வெளியிட்ட A/L கடந்த கால வினாக்களும், விடைகளும், புலமைப் பரிசில் பரீட்சை, கடந்த கால வினாக்களும், விடைகளும், திருமண அழைப்பிதழ்களும், இன்னும் பல பாடசாலை உபகரணங்களும் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (20983)

## தேவை

டியூட்டரி வாங்கு, மேசை உடன் தேவை. தொடர்பு: விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-2421]

## இலவச திருமண சேவை

36 வயது, உத்தராடம் 1, செவ்வாய் 8, சைவ போசன மணப் பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை வெளிநாடும் ஆலோசிக்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4852]

29 வயது, பூசம், ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் விண்ணப்பிக்கலாம். நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை. நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4850]

33 வயது, அவிட்டம், கிரேக்க கப்பலில் மூன்றாவது அதிகாரியாகக் கடமை ஆற்றுபவருக்கு ஏற்ற மணமகள் தேவை. தற்போது இலங்கையில் உள்ளார். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4851]

## மணப்பெண் தேவை

யாழ். இந்து, லண்டனில் வீசாவுடன் இருப்பவருக்கு செவ்வாய்க் குற்றமுள்ள, படித்த, அழகான, சுமாரான உயரமுடைய, 25 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில்செய்து லண்டனுக்கு வீசாவுடன் கூட்டிச் செல்லப்படும். லண்டனில் உள்ள பெண்களுக்கும் விண்ணப்பிக்கலாம். இல. 411, C/o உதயன், யாழ்ப்பாணம். [21011]

கனடாவில் நிரந்தரமாகத் தொழில் புரியும் மகனுக்குப் பெற்றோர் மணப்பெண் தேடுகின்றனர். மணப்பெண் 25 வயதிற்கு உட்பட்டவராகவும், நல்ல குணம், அழகு உடையவராகவும் இருத்தல் வேண்டும். தொடர்பு இல. 407, C/o உதயன். [20968]

## சங்கீதம்

சங்கீதம் வினா – விடை தயாரிப்பு: ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா. 6முதல் 9வரை பயிலும் மாணவர்களுக்கும், சங்கீதசபை இரண்டாம் தரம் பயிலும் மாணவர்களுக்கும் பயன் தருவது நடுவுத்துருத்தி நிறுவனத்தின் வெளியீடு; கிடைக்குமிடம் ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [20931)

## விற்பனை

இரண்டு மாதம் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் பூச்சி நீக்கப்பட்டது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுப்பிரமணியம், பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கு, ஸ்ரேசன் முன்பாக. [4862]

## தவறிவிட்டது

எனது புத்தகப் பை விரிவுரைக் குறிப்புகளுடன் 12-5-92 அன்று முத்துத்தம்பி சிறுவர் பாடசாலைக்கும் நாயன்மார்கட்டு சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மருத்துவபீடத்தில் ஒப்படைத்து சன்மானத்தை பெற்றுக் கொள்ளவும். க. விஜயகுமார் மருத்துவபீடம் [21006]

## மணமகன் தேவை

யாழ். இந்து. குற்றமற்ற 34 வயது Accounts Clark மணப்பெண்ணுக்குப் பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம்: மகம் மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [20988]

யாழ். இந்து, 39 வயது, 8 இல் செவ்வாய் (கிரக பாவம் 20) பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம்: பரணி. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20989]

தென்மராட்சி இந்து, 34 வயது, பூரம் செவ்வாய் 2 இல் A/L சித்தியடைந்த பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு விளம்பர இல. 408, C/o உதயன். [20979]

இந்து, 7 இல் செவ்வாய் குற்றமுள்ள ஆசிரியைக்கு பெற்றோர் ஏற்ற வரனைத் தேடுகிறார்கள். ரோகிணி நட்சத்திரம், சீதனம் தரப்படும். தொடர்பு கொள்ளவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [4858]

## மணப் பெண்கள் தேவை

45 வயது, இந்து வியாபாரிக்கும், குற்றமற்ற 28 வயது Postmanக்கும், குற்றமுள்ள 42 வயது சைவபோசன எக்கவுண்டனுக்கும், குற்றமற்ற 37 வயது பெரிய மில் முதலாளிக்கும் தேவை. கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20987]

## மணமக்கள் தேவை

ஆண் 33 வயது, சிறு வியாபாரி, பூர நட்சத்திரம், 29 வயது, குற்றமற்ற Ph. D. மணமகன், தாரமிழந்த குற்றமற்ற 45 வயது மணமகன், குற்றமற்ற 26 வயது டாக்டர் பெண், இவர்களுக்குத் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20986]

## ஆங்கிலப் பயிற்சி

English Grammar, Spoken English V. N. Kandasamy 3 மாதப் பயிற்சி. கிழமையில் 2 நாட்கள் ஆரம்பம். 17-5-92 ஞாயிறு 1 ஆம் பிரிவு காலை 7-15 மணிக்கு. 2 ஆம் பிரிவு மாலை 3-15 மணிக்கு. 87, திருநெல்வேலி றோட், [பாலத்திற்கு அண்மையில்] கொக்குவில். [21013]

## பரீட்சை (ஆண்டு - 5, 4)

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 17-5-92 ஞாயிறும், ஆண்டு 4 பரீட்சை 24-5-92 ஞாயிறும், மு. ப. 8-00 – மு. ப. 11-00 நடைபெறும். பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21017]

## வர்த்தக வினா - விடை

G. C. E. (O/L), ஆண்டு 9, 10 வகுப்புகளுக்குரிய வர்த்தக வினா-விடைத்தொகுப்பு - மீள்பதிப்பு செய்யப்பட்டு யாழ் நகரில் முன்னணி புத்தகசாலைகளிலும், கொக்குவில் இந்துக்கல்லூரி அருகாமையிலுள்ள புத்தகசாலையிலும், மானிப்பாய் நாயகபாலன் புத்தகசாலையிலும் விற்பனையாகின்றன. ஆக்கம் த. தர்மராஜா. [20928]

---

## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்:

**29—12—1959**

ஆண்டவன் மடியில்:

**26—05—1983**

### செல்வன் கனகசபாபதி குகநேசன்

(பாபு)

திதி: 16—05—1992

அன்புச் செல்வமே! அருமை மகனே! சென்றதே வருடம் ஒன்பது, சிலிர்க்குதே எங்கள் நெஞ்சம்! புன்சிரிப்பின் புகலிடமே! புகழுடனே வளர்ந்தாயே! ஆறாது, ஆறாது நெஞ்சம் அது அழுதாலும் தீராது கொஞ்சமும். மீளாத்துயில் கொண்டு வருடம் ஒன்பது ஓடி மறைந்தாலும், மாறாது மறையாது ஒளிவீசும் உன் உருவம்.

உமது பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, அத்தான்மார்,
அக்கா, தங்கை, தம்பி, மச்சான்,
மருமக்கள்.

க. கனகசபாபதி.
''சிவபதி'',
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். [4842]

---

## I. A. B. (London)

★ Prelim ★ Inter ★ Finals

- G. C. E. சாதாரண தரத்துடன் London பரீட்சையில் தேர்ச்சி பெறவும்,
- தொழில் புரிவோருக்கு கணக்கியலில் தேர்ச்சி பெறவும்,
- கணக்குப் பதிவாளராக (Book-Keeper) தொழில் புரியவும் உகந்தது.

ஆரம்பம்: 18-05-1992 வார நாள் வகுப்புகள்
24-05-1992 வார இறுதி நாள் வகுப்புகள்

விபரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**

Branch:
Sirupiddy North, Neervely.

14, St. Peter's Lane, Jaffna.

[சி-2328]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 93** பிரிவு - 3
ஆரம்பம்: 16-5-1992
காலை 8-00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரிகம் / இந்துசமயம் | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. ஸ்ரீதரன் |

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

[சி/2414]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### ஞானசவுந்தரி பரராசசேகரம்

மண்ணகம்: 03-02-1933
விண்ணகம்: 16-04-1992

அன்பும் அறனும் அசையாநல் ஊக்கமும்
ஆழ்ந்தவிறை பக்தியும் கொண்டு
இன்புடன் எம்மை இழுக்காது புரந்தவுன்
இனியமுகச் செல்வியும் செயலும்
நன்குறப் பதிந்து நலியமனம் வாட்டுதம்மா!
நாளுமினி யாரின் குன்போல்
அன்னை பருகி பரும்மனை மாமியுன்னை
ஆற்றுமோ மறப்பதும் மாநிலத்தே!

அன்பு மறவாத:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''பத்மா வாசம்'',
வட்டு மேற்கு.
வட்டுக்கோட்டை. [21008]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வினையை விலைக்கு வாங்கும் முடிவு!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சட்ட விரோத இயக்கம் என்று இந்திய மத்திய அரசாங்கம் பிரகடனப்படுத்தி உள்ளது.

இதன்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடு இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர்களாகக் கருதப்படும் இந்தியப் பிரசைகளும் தண்டிக்கப்படுவர்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து பல மாதங்களுக்கு முன்னரே இந்தியாவில் பெரிதாகப் பிரஸ்தாபிக்கப்படத் தொடங்கலாயிற்று. தமிழகத்தின் ஜெயலலிதா அரசும், தமிழ் நாடு காங்கிரஸ் பிரிவும் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அடிக்கடி புலம்பி வந்தன.

ஆயினும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து புதுடில்லி உயர் அரசியல் வட்டாரங்களில் இரண்டு கருத்துக்கள் நிலவின. விடுதலைப் புலிகளைத் தடை செய்வதால் பாதகமான விளைவுகளே ஏற்படும் என்று அனுபவம் மிக்கப் பல மூத்த தலைவர்களும், அதிகாரிகளும் கருதினார்கள்.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது இந்தியாவின் நீண்ட கால நலன்களுக்கு உகந்ததல்ல — என்று 1987 இல் சறுக்கி விழுந்த இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும், ஆலோசனை நிறுவனத்தினரும் மத்திய அரசு உயர்பீடத்துக்கு இடித்துரைத்தார்கள். ஈழத் தமிழர் பிரச்சினையில் முன்னர் விட்ட தவறினால் ஏற்பட்ட பாதிப்புகளை எடுத்துக் கூறியிருந்தார்கள்.

ஆயினும் உயர்பீடம் மீண்டும் தவறான முடிவையே எடுத்திருக்கிறது. கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களையும், விளைவுகளையும் மறந்து மீண்டும் அதே வழி செல்வதற்குத் தீர்மானித்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பழுத்த அரசியல்வாதி. அவரே தனது நாட்டுக்கு வினையை விலைக்கு வாங்க முனைந்தால், தடுப்பது எப்படி?

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழத்தில் இயங்கும் விடுதலை இயக்கம். அதனைத் தடை செய்வதின் மூலம் தமிழகத்தில் எழுச்சி அடைந்து வரும் விடுதலை உணர்வை, பிரிவினை இலக்கை எப்படித் தடுக்க முடியும்? விடுதலை உணர்வை அடக்க முனைந்தால் அது மேன்மேலும் வெடித்துப் பூதாகாரமாகுமே அன்றி அடங்கிப் போகாது!

விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதாகக் கூறி தமிழகத்தில் உள்ள விடுதலை வேட்கை கொண்ட சக்திகளை நசுக்க முற்பட்டால் அவை புலப்படாதிருந்து மேலும் கொழுத்துப் பருக்கும்! அதன் பின்னர் விளைவு என்னவாக இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் தான், இப்போது ஆசியப் பிராந்தியத்திலேயே மிகப் பெரும் விடுதலைப் போராட்ட சக்தியாக வளர்ந்திருக்கிறது!

அதனை இந்திய மத்திய அரசு மறந்து போனது அதன் துரதிர்ஷ்டமே!

# முதலில் கைதான சுவிஸ் பிரஜை ஆயுதப் பயிற்சி பெற்றவராம்

கொழும்பு, மே 16

ஆயுதக் கடத்தல் தொடர்பாக முதலில் கைதான 40 வயதான சுவிஸ் பிரஜை, மத்திய கிழக்கு நாடு ஒன்றில் ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்பதும், அவர் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டவர் என்பதும் விசாரணையில் தெரிய வந்திருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்த மத்திய கிழக்கு நாட்டில் தாம் பயிற்சி பெற்றார் என்பதையும் எந்த நாட்டுக்காக அல்லது குழுவுக்காக தாம் யுத்தத்தில் ஈடுபட்டார் என்பதையும் அந்த சுவிஸ் பிரஜை வெளியிடவில்லை என்றும் பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

பொலீஸ் விசாரணையின் போது, மேற்காசிய நாடு ஒன்றுடன் தமக்கு தொடர்பு இருப்பதை அந்த சுவிஸ் பிரஜை ஏற்றுக்கொண்டார். இவர் குறிபார்த்து, இலக்கு மீது சுடுவதில் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பயிற்சி பெற்றவர் என்றும் விசேட நடவடிக்கைகள் பணியகம் தெரிவித்தது.

இலங்கையின் வட பகுதியோடு உள்ள தொடர்புகள் மற்றும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிப்பதை அவர் தவிர்த்து வருகின்றார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

''இவ் விஷயத்தில் நாம் அவருடன் இணங்கிப் போக முடியாதுள்ளது'' — என்றும் பொலீஸ் அதிகாரி ஒருவர் சொன்னார்.

அந்த சுவிஸ் பிரஜையின் உடலில் காணப்படும் துப்பாக்கிச் சூட்டுத் தழும்புகள் என்று கூறப்படுவது, விசேட நடவடிக்கைகள் பணியகத்தைச் சேர்ந்த விசாரணையாளர்களைப் பொறுத்தவரையில் மர்மம் நிறைந்த அம்சமாகவே இருப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இன்டர்போலின் உதவியுடன் சந்தேக நபருக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள சொத்துகள் பற்றி ஆராயப்படும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 7 ஆம் திகதி ஜாஎல வீட்டில் வைத்து ஏராளமான ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட இச் சுவிஸ் பிரஜையை, பிரஞ்சு மொழி பேசும் குழுவின் உதவியுடன் இரண்டாவது தடவையாகத் துருவித் துருவி விசாரணை செய்ய விசேட நடவடிக்கைகள் பணியகம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆயுதக் கடத்தல் குற்றத்துக்காக இந்த சுவிஸ் பிரஜையை முன்னர் ஜெனிவா பொலீஸார் கைது செய்து விசாரித்தனர் என்று பொலீஸ் விசாரணையில் இருந்து தெரியவருகின்றது

அவரது உடலில் உள்ள தழும்புகள் பழையவை என்றும் கந்தானையில் தங்கி இருந்த சமயம் அவர் நிறைய துப்பாக்கிச் சூடுகளை நடத்தி இருக்க வேண்டும் என்றும் அவரது வேவல வீட்டில் கண்டு பிடிக்கப்பட்ட, பாவிக்கப்பட்ட 500 ரவைக் கூடுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதங்களுடன் இலக்கு பார்த்து சுடும் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படும் பலகை ஒன்றும் சந்தேக நபரிடம் இருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது. (இ-எ)

## விடுதலைப் புலிகள் மீதான தடை:

# ஜெயலலிதா மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை

சென்னை. மே 16

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்திருப்பது குறித்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

சட்டம் - ஒழுங்கைப் பராமரிப்பதில் மாநில அரசின் முயற்சிகளை வலுப்படுத்த இந்த நடவடிக்கை உதவும் என்று நேற்று முன் தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்தார்.

தடை உத்தரவை வரவேற்ற தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி விடுதலைப் புலிகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்கும் ஸ்தாபனங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளையும் தடை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். [இ-5]

# எதிரிகளை வஞ்சம் தீர்க்க ஜெயலலிதா முயலலாம்

## கருணாநிதி அச்சம்

புதுடில்லி, மே 16

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விதிக்கப்பட்ட தடையை, அ. தி. மு. க. அரசு தனது எதிரிகள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள முறைதவறிப் பயன்படுத்தக் கூடும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

(இ-5)

## யாருடையவை?

யாழ்ப்பாணம், மே 16

★ யாழ். நகரப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பை [பேர்ஸ்] ஒன்றை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு நடராசா கம்பதாசன் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

★ நல்லூர்ப் பகுதியில் கண்டெடுத்த நாட்குறிப்பு ஒன்றையும், குறிப்பிடத்தக்க தொகைப் பணத்தையும் அரியாலையைச் சேர்ந்த திரு. தி. பத்மதாஸ் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

★ சங்கானையில் கண்டெடுத்த பணப்பை (பேர்ஸ்) ஒன்றை உடுவிலைச் சேர்ந்த சியாமளா சுப்பிரமணியம் சுன்னாகத்தில் உள்ள உதயன் சேவை நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

இப் பொருள்களின் உரிமையாளர்கள் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அவற்றை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (அ)

## வவுனியாவில் கைதான பாகிஸ்தானியர்

வவுனியாவில் உள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு சிகரெட் வாங்கச் சென்ற வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மூவர் அங்கிருந்து 71 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றனராம்.

கைது செய்யப்பட்ட அம் மூவரும் பாகிஸ்தான் நாட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# மக்களுக்குப் பூரணசேவை புரிந்தவர்; அவர்களுக்கு மன உறுதியும் தந்தவர்

## யாழ். ஆயருக்குப் பாராட்டு

குருநகர், மே 16

பல வழிகளாலும் மக்களுக்குப் பூரணமான சேவை புரிந்தவர் யாழ். ஆயர். நெருக்கடி மிகுந்த வேளையில் அசையாத ஆன்ம பலத்துடனும், உறுதியுடனும் இந்த மண்ணிலேயே நின்று யாழ். மக்களுக்கு மன உறுதியையும், தன்னம்பிக்கையையும் கொடுத்தவர் அவர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். பேராலயத் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற யாழ். ஆயரின் மும்மடி விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ். ஏ. மைக்கல்சாமி அடிகளார் தலைமையில் விழா நடைபெற்றது.

அரசாங்கப்படைகள் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீசித் தாக்கி மக்களை அச்சுறுத்தி இப்பகுதியிலிருந்து வெளியேற்ற நினைத்தன. ஆனால், ஆயர் மக்களுக்கு மன உறுதி அளித்து அந்நிலை ஏற்படாமல் தடுத்தார்.—

தமது ஆயர் இல்லத்தின் மீது தாக்குதல் நடந்தபோதிலும் அவர் மனம் தளரவில்லை. அங்கிருந்து இடம் பெயரவில்லை—

அரச படைகளின் அட்டூழியங்களை எதிர்த்தும், அகதிகளாக அலைந்த மக்களுக்கு உதவிகள் புரிந்தும், கலை, பண்பாடு மொழிகளுக்குச் சேவையாற்றியும், இன, பொருளாதார அழிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்தும் பூரணத்துவம் மிக்க சேவையை அவர் ஆற்றியுள்ளார்— என்றும் துணைவேந்தர் கூறினார்.

தென்னிந்திய திருச்சபையின் ஆயர் மேதகு டி. ஜே. அம்பலவாணர் பேசுகையில் கூறியதாவது:-

கச்சதீவு பிரச்சினையின் போது அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயம் யாழ். கத்தோலிக்க திருச்சபையின் கீழ் உள்ளது என்பதை இலங்கை இந்திய அரசுகள் கவனத்தில் எடுத்துக் கொண்டே அதனை இலங்கைக்கு உரியது எனத் தீர்வு கண்டன.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் முன்னர் யாழ். மறை மாவட்டத்தின் கீழ் இயங்கின. ஆகையால் அதேபோல— கிழக்கு மாகாணமும் தமிழர்களுக்கு உரியது என்பதை அது தமிழரின் தாயகம் என்பது நிலை நிறுத்தப்படுகிறது. இலங்கை அரசு இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆபத்துக் காலங்களிலும், அபாயம் நிறைந்த வேளைகளிலும் மக்களுடன் கூட இருந்து அவர்களின் துயரங்களைத் தணிப்பதில் முன்னின்று உழைத்த இறைவனின் தூய்மையான பிரதிநிதி யாழ். ஆயர்— என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் பேசும் போது—

சமய, மொழி, இலக்கியச் சேவைகளை மக்களின் உயர்வு கருதி ஒரு தொண்டாக ஆயரவர்கள் ஆற்றினார்கள். மனிதனாகப் பிறந்து தெய்வமாக மதிக்கும் நிலைக்கு இன்று போற்றப்படுகிறார். இறைவன் எங்கே இருக்கிறான் என்று கேட்போருக்கு ஆயரின் பணி பதிலாகிறது— என்றார்.

### அட்டோர்னி ஜெனரல்

கொழும்பு மேற்றிராசன ஆயர் அதிவண. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகை கூறியதாவது;

யாழ். ஆயருக்கு ஆயர்கள் மன்றத்தில் ''அட்டோர்னி ஜெனரல்'' என்ற பட்டப் பெயரொன்றைச் சூட்டியுள்ளோம்.

மெய்யியல் ரீதியான சிக்கல்கள் எம் மத்தியில் தோன்றினால் யாழ். ஆயரையே நாம் அணுகுவோம். திருச்சபைச் சட்டங்களை நன்கு அறிந்துள்ள அவர், அவற்றுக்கு சுமுகமான தீர்ப்பை வழங்குவார். அதனாலேயே எமது ஆயர்கள் மன்றத்தில் அவருக்கு அந்தப் பட்டப் பெயரைச் சூட்டினோம் என்றார்.

மற்றும் பலரும் ஆயரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது;

எனது தாயாரே நான் இந்நிலை அடைவதற்கு காரணமானவர். அவருக்கு கடைசிப் பிள்ளையான என்னைக் கர்ப்பத்தில் வைத்திருக்கையில் தெய்வீக அழைப்பொன்றைக் கண்டதாக சிறுவயதில் அன்னை அடிக்கடி சொல்வார். அதுவே நான் குருவாவதற்கு ஏதுவானது. அதேபோல அம்மானைப் பாடல்களை நான் விரும்பிப் படிப்பதற்கும் எனது தாயார் தினமும் பாடக்கேட்டு வந்ததேயாகும் — என்றார்.

[அ-51-111]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அத்த" ஆசிரியருக்கு பிணை

கொழும்பு, மே 16

உடுகம்பொல விவகாரம் குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 'அத்த' பத்திரிகையின் ஆசிரியர் லொக்கு பண்டார வணிகசேகர மற்றும் வெளியீட்டாளர் வெலிவித்த ஆராச்சிகே தர்மதாஸ ஆகியோரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. வீரசூரியா தலா 5 ஆயிரம் ரூபா உறுதிப்பிணையில் விடுதலை செய்தார்.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் உடுகம்பொலவின் அறிக்கை ஒன்றை வெளியிட்டு கிரிமினல் மானநட்டம் ஏற்படுத்தியதாக இவ்விருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இருவரையும் பிணையில் விடுவிக்க சட்டமா அதிபர் அனுமதி வழங்கியிருந்தார். வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# தமிழீழ தேசிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மூலம் தென்னாசியாவிலுள்ள தனது நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப்படுத்தி விட்டது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் தூரநோக்கற்ற, ராஜதந்திர விவேகமற்ற இந்த அவசர நடவடிக்கையானது எதிர்காலத்தில் இந்திய பூகோள—அரசியல் நலன்களுக்குத்தான் பாதகமாக அமையக்கூடும்.''

### உண்மை இல்லை

''தமிழ்நாட்டு இளைஞர் சிலருக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுதப்பயிற்சி அளித்ததாகவும், தமிழ்நாட்டில் பிரிவினைவாதத்தைத் தூண்டிவிட்டதாகவும் இந்தியா எமது இயக்கம் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. இந்திய அரசுதான் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளித்து, ஆயுதமும் வழங்கி ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டது. தமிழ் இளைஞர்களை பகடைக்காய்களாகப் பாவித்து தனது பூகோள நலன்களைப் பூர்த்தி செய்ய முனைந்தது. அப்பொழுது இந்த நடவடிக்கைகளை 'சட்டவிரோதமானது' என இந்திய அரசு கருதவில்லை.

### வரலாற்றுத் தவறு

தமிழர் தேசியப் பிரச்சினையில், அதாவது, ஓர் அந்நிய நாட்டுப் பிரச்சினையில் இந்திய அரசுதான் தலையிட்டது. அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்திற்கு ஓர் ஆக்கிரமிப்புப் படையை அனுப்பிவைத்ததும் இந்திய அரசுதான். விடுதலைப் புலிகளுடன் போர் தொடுத்து, தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைந்ததும் இந்திய அரசுதான். இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பத்தாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்ததும் இந்திய அரசு தான்.

ஆகவே. ஒட்டுமொத்தத்தில் இந்திய அரசுதான், அதுவும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சிபீடம்தான் எமது உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட்டு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த காரணமாக இருந்தது. இவ்விதம் தமிழீழ மக்களுக்கு எதிராக பெரும் வரலாற்றுத் தவறுகளை இழைத்துவிட்டு இப்பொழுது நாம் இந்திய விவகாரத்தில் தலையிடுவதாக எமது இயக்கம் மீது இந்திய ஆட்சிபீடம் குற்றம் சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டு விசமத்தனமானது.

### விழிப்புணர்வுக்கே அஞ்சுகிறது

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக டில்லி ஆட்சிபீடம் கூறுகிறது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. விடுதலைப் புலிகள் இந்தியாவின் விரோத சக்தியாகச் செயற்படவில்லை. அத்துடன் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கவும் எண்ணவில்லை. இந்தியா அஞ்சுவது புலிகளுக்கு அல்ல. தமிழரின் இன உணர்விற்கும் தேசிய விழிப்புணர்வுக்குமே இந்தியா பயப்படுகிறது. தமிழ்த் தேசாபிமான எழுச்சியின் புரட்சி வடிவமாகவே இந்திய அரசு புலிகளையும், புலிகளின் தலைவர் பிரபாகரனையும் நோக்குகிறது. இதனால் தான் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து தலைவர் பிரபாகரன் மீது மாசு கற்பிக்க இந்தியா முயற்சிக்கிறது.

### தமிழக மக்களின் பொறுப்பு

அயல் நாட்டில் இயங்கும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமான புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதன் மூலம் தமிழ் நாட்டில் கருவாகிவரும் தேசிய உணர்வலைகளுக்கு அணைகட்டிவிடலாமென டில்லி ஆளும் வர்க்கம் கருதுகிறது. எனவே புலிகள் மீதான இத்தடையானது தமிழ்நாட்டுத் தமிழரின் இனவுணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்கும் இடப்பட்ட விலங்குகள் என்றே கருதவேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டிய பொறுப்பு தமிழக மக்களையே சாரும்.'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]


## நிர்வாகச் செயலாளர்

# பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கல்வித் தகைமை: | முகாமைத்துவ/வணிக - பட்டதாரிகள் |
| வயது எல்லை: | 25 — 35 |
| சம்பளம்: | 2000/- [ஆரம்பம்] |
| விண்ணப்ப முடிவு திகதி: | 31-05-1992 |

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி;

தலைவர்,

**உலர்வலய அபிவிருத்தி மன்றம்,**

257/2, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(இ/2330)


# குடும்ப அட்டை இறுதி திகதி 20

யாழ்ப்பாணம், மே 16

குடாநாட்டில் வசிக்கும் குடும்பங்கள் தத்தமது பிரிவு கிராம சேவை அலுவலகர்களிடம் இருந்து குடும்ப அட்டைகளைப் பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி இம்மாதம் 20 திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தினத்திற்குப் பின்னர் தாமத கட்டணம் அறவிடப்பட்டே குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[ஒ-5]

# வங்கியாளர் பரீட்சை வவுனியாவில்

கொழும்பு, மே 16

இலங்கை வங்கியாளர் இடைநிலை இறுதிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாதுள்ளதால் அங்கு தோற்ற விண்ணப்பித்தவர்கள் வவுனியாவில் உள்ள பரீட்சை நிலையங்களில் தோற்றுமாறு இலங்கை வங்கியாளர் நிலையம் கேட்டுள்ளது

எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிய பரீட்சை இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையிலும் —

30 ஆம் திகதிய பரீட்சை வெலிக்குளம் ஜி. ரி. எம். எஸ் பாடசாலையிலும் — நடைபெறும். [இ-3]

# 21 ஆயிரம் பேர் இதுவரை நாடு திரும்பினர்

கொழும்பு, மே. 16

இந்தியாவிலிருந்து இதுவரை இலங்கைக்கு திரும்பிய அகதிகளின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 620 பேர் என்றும்—இவர்களில் 2 ஆயிரத்து 862 பேர் விமான மார்க்கமாக இங்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10]

# தமிழ் கட்சிகள் தீர்மானம்

கொழும்பு, மே 16

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து ஏழு தமிழ்க் கட்சிகள் தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தத் தீர்மானம் தொடர்பாக மேலதிக பேச்சுக்களை நடத்த அந்த 7 தமிழ்க் கட்சிகளும் நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பை சந்திக்க இருந்தன என்றும்—

தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலான அந்த பேச்சுக்களில் இணக்கம் ஏற்பட்டால் அக்கட்சிகள் பின்னர் கூட்டாக ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

# மைசூர் பருப்பு தனியாரும் இறக்குமதி

கொழும்பு, மே 16

மைசூர் பருப்பு இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட தனியார் துறையினருக்கும் அனுமதி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. எனினும் இதற்கான அனுமதிப் பத்திரக் கட்டுப்பாடு தொடர்ந்து சில காலம் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# மட்டக்களப்பு மீனவருக்கு ராணுவத்தினர் கட்டுப்பாடு

## அனுமதி அட்டை பெற வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் கடலில் தமது தொழிலுக்குச் செல்ல விசேட அனுமதி அட்டைகளையும், அடையாள அட்டைகளையும் பெறவேண்டும்.

விரைவில் இந்த அனுமதி அட்டைகளும் அடையாள அட்டைகளும் அவர்களுக்கு வழங்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் அறிவித்துள்ளது. [இ-5]

# தடுப்பு மற்றும் புனர்வாழ்வு முகாம்களில் 5,875 பேர்!

இலங்கை மனித உரிமைகள் பணியகத்தின் தகவலின்படி நாட்டில் உள்ள 5 தடுப்பு முகாம்களிலும் 9 புனர்வாழ்வு முகாம்களிலும் குறைந்தது 5 ஆயிரத்து 875 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

இதனிடையில் — நாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயங்களை மனித உரிமைகள் பணியகக் குழு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இதுவரை வெள்ளவாயா, திஸ்ஸமஹாராம, அம்பாந்தோட்டை, தங்காலை, மாத்தறை மற்றும் காலி ஆகிய இடங்களில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு மனித உரிமைகள் பணியகக் குழுவினர் விஜயம் செய்துள்ளனர். [இ-[illegible]]

# கொழும்பு பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம்

கொழும்பு பல்கலைக்கழகத்தை உடனடியாக திறக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் விடுதிவசதி செய்து தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 10 மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இந்த உண்ணாவிரதம் நடைபெறுகிறது.

இவர்களில் ஒரு தமிழ் மாணவனும் அடங்குவர்.

உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களைப் படம் பிடிக்க பொலீஸார் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை துரைசிங்கம் (ஆசாரியார்)

வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை துரைசிங்கம் [ஆசாரியார்] காலமாகிவிட்டார்.

இவர் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சாந்தினி, துரைரட்ணம், விமலதாஸ், பிறேமதாஸ், பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம், பத்மலோசினி, மதுமதி ஆகியோரின் மாமனாரும். அலன், மேனன், விபீகா, விபூசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [16 05-92] சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு 32/10, மூத்த வினாயகர் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

நல்லூர்.

தகவல்:
மனைவி, மக்கள்.

[21018]

## வைத்திலிங்கம் கனகம்மா

குப்பிளானைச் சேர்ந்த திருமதி வைத்திலிங்கம் கனகம்மா [ஓய்வுபெற்ற ஆசிரியை] 15-5-92 இல் காலமாகிவிட்டார். இவர் இ. வைத்திலிங்கத்தின் [இளைப்பாறிய தலைமை ஆசிரியர்] அன்பு மனைவியும், சாந்தமலர் [லண்டன்], சிவானந்த சக்தி [நன் நடத்தை சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்], கேதீஸ்வரலிங்கம் [லண்டன்], ஐங்கரலிங்கம் [லண்டன்], குகதாசலிங்கம் [லண்டன்], ஞானசக்தி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பாலசிங்கம் [லண்டன்], திரு. முத்துராசா, கௌரி, சுசிலா, செந்தூர் யோகன் ஆகியோரின் அன்பு மாமியும், சோபனா, அமிர்தா, பாமினி, யகன், கசானன். பிரவினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது ஈமைக் கிரியைகள் இன்று 16-5-92 பி. ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. தகனத்திற்காக குப்பிளான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான்,
ஏழாலை.

தகவல் :
கந்தையா
[மைத்துனர்]

[20568]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org